# ABSTRACT

Teacher professional development is closely linked with the performance levels, competencies and personality development of students. The Post Graduate Diploma in Education programme conducted by the National Institute of Education is one such programme that aimed at professional development of teachers in Sri Lanka. This study is undertaken with an objective of assessing the strengths and weaknesses of the programme through the perspectives of the stakeholders and to make appropriate recommendations so that this programme may contribute towards the professional development of teachers in a more effective way.

Using a survey research design a sample of three regional centres of the NIE were randomly selected and data were collected from selected lecturers and student teachers through questionnaires and interviews. Appropriate documents were studied and limited number of observations also carried out in the lecture rooms. The collected data were analysed using descriptive statistical techniques.

The findings proved that the student teachers had a very positive attitude towards the PGDE programme. However, lack of physical facilities and equipment, lack of commitment on the part of lecturers, dissatisfaction towards payments were the main barriers for the success of the programme. The lecturers also did not have a positive attitude towards accepting innovative procedures in the teaching learning process.

It is recommended that very strict standards should be followed in the recruitment of lecturers and also a supervisory network should be established to monitor the performance of the lecturers. The curriculum should be revised taking into the modern trends in teacher training. The capacity of the lecturers should be continuously improved through capacity enhancement strategies. New assessment procedures including practical assignments to student teachers should be implemented.

# ஆய்வுச் சுருக்கம்

ஆசிரியர் வாண்மை விருத்தி என்பது மாணவர்களின் கல்விசார் அடைவு மட்டங்கள், தேர்ச்சிகள் மற்றும் ஆளுமை விருத்தியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் கல்வித் துறையினால் நடத்தப்படுகின்ற பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டமாகும். அந்த வகையில் தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தை உரித்தாளர்களின் கண்ணோட்டத்தில் மதிப்பிடுவதன் மூலம் இந்த கற்கைநெறியின் நிகழ்கால நிலைமைகளை ஆராய்ந்து நிகழ்ச்சித் திட்டத்தின் வலிவுகள் நலிவுகளை இனங்காண்பதும் இதன் மூலம் நலிவுகளை நீக்குவதற்கான ஆலோசனைகளை முன்வைத்து நிகழ்ச்சித் திட்டத்தை மேம்படுத்துவதும் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை அடைவதற்காக அளவறி ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டது. தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்று பிரதேச நிலையங்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு இக்கற்கை நிலையங்களில் கற்கும் ஆசிரிய மாணவர்கள்,விரிவுரையாளர்கள் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு, ஆவணங்கள் போன்ற ஆய்கருவிகளின் உதவியுடன் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் பண்பறிமுறையிலும் அளவறி முறையிலும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு மதிப்பிடப்பட்டன.

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வழங்கப்படும் ஆசிரியர் கல்வி தொடர்பாக ஆசிரிய மாணவர்கள் மத்தியில் சாதகமான மனப்பாங்குகள் காணப்பட்ட போதிலும் பௌதிக வளப்பற்றாக்குறை, வேதனப்பற்றாக்குறை மற்றும் விரிவுரையாளர்களின் அர்ப்பணிப்பின்மை, புதிய விடயங்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கின்மை போன்ற காரணிகள் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றிக்கு எதிரான தடைகளாக இனங்காணப்பட்டன.

விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்ளும்போது தரநிர்ணய விதிமுறை களைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் மேற்பார்வை வலையமைப்பொன்றை ஏற்படுத்தி நவீன கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்திக் கற்பிப்பதை மேற்பார்வை மூலம் உறுதிப்படுத்தவும் வேண்டும். பாடத்திட்டத்தை நவீனமயப்படுத்தலுடன் கற்பித்தல் பயிற்சிக்குப் பொருத்தமான உள்ளக மேற்பார்வையாளர்களை நியமிக்க வேண்டும். ஒப்படைகளை பிரயோக ரீதியான, தனிநபர் குழுமுறை முன்வைத்தலாக நடைமுறைப் படுத்தல், மதிப்பீட்டில் புதிய நியதிகளை அறிமுகப்படுத்தல் என்பவற்றுடன் இணைப் பாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் இயலளவை மேம்படுத்தும் செயலமர்வுகளைத் தொடர்ச்சியாக நடத்துதல் போன்றன தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தை பயனுறுதி வாய்ந்ததாக மாற்றுவதற்கான ஆலோசனை களாக முன்வைக்கப்பட்டுள்ளன.




OPEN UNIVERSITY OF SRI LANKA ★ LIBRARY